2011 ஜனவரி 11] [திரு. ஆர். ஞானதாஸ்]

ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்தும் பணி தொடங்கப்படாமல் உள்ளது, பலமுறை சுட்டிக்காட்டியும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. சாத்தூர், கோவில்பட்டி, கழுகுமலையில் இன்னும் தீப்பெட்டிக் குழுமங்கள் துவக்கப்படவில்லை. இதனால் 50,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். தடையில்லா மின்சாரம் இல்லாததால் விருதுநகர் மாவட்டத்தில் தொழில் உற்பத்தி... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரை முடிந்துவிட்டது. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-1-2011) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

11. (i) 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2010) 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாள் முதல் செயலுக்கு வந்த நாளாகக் குறிப்பிட்டது குறித்தும்; (ii) வணிக வரி இணை ஆணையாளரை அவருடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியிலுள்ள யாதொரு வணிகரைப் பொறுத்தமட்டில் நியமன அதிகாரியாக 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஒன்றாம் நாள் முதற்கொண்டும் அந்நாளிலிருந்தும் நியமித்தது குறித்தும்; (iii) வணிக வரிகள் ஆணையாளரை 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஒன்றாம் நாள் முதற்கொண்டும் அந்நாளிலிருந்தும் அதிகாரியாக நியமித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி.1) துறையின் 1-6-2010 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 77-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2010) 15 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவு (டி-1)த் துறையின் 1-6-2010 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 78-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2010) 15 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையங்கள் (அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அ.நி.4-2) துறையின் 28-6-2010 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 255-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

14. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

15. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

5. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2009-2011)

6. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2009-2011)